DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**CC.No.9/2023**

PROSECUTION WITNESS No. PW5.

| | |
|---|---|
| Name | : சேவியர் ஆனந்த் |
| Father Name | : ஆனந்த ராஜ் |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 12th day of March, 2025.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது மாநகர போக்குவரத்து கழகத்தில் மூத்த கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 2014 –2016 வருடத்தில் நான் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது தொழிளாலர் நலப்பிரிவில் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மருத்துவ அட்டை ஆகியவை வழங்குவது எனது பணியாகும். அந்த சமயத்தில் வெற்றி செல்வன் என்பவர் எனது அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாக பணிபுரிந்து வந்தார். எங்கள் தொழிலாளர் நலப்பிரிவிற்கும் அவர் தான் பொறுப்பு. திரு. வெற்றி செல்வன் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு டிரைன் டிக்கெட் போடுவதற்காக HOR Form கொடுத்து அனுப்புவார்கள். நான் சென்னை சென்ட்ரல் அலுவலகம் சென்று டிரைன் டிக்கெட் புக் செய்து டிக்கெட்டை

அமைச்சரின் இளநிலை உதவியாளர் மதியழகன் வசம் ஒப்படைப்பேன். அவர் இல்லை என்றால் சீனியர் PA திரு. ரமேஷ் அவர்களிடம் கொடுப்பேன். அமைச்சர் அலுவலகத்தில் சரவணன், இப்ராகிம் என்ற பெயரில் தட்டெழுத்தர்கள் இருந்தார்கள். PA s ஏதேனும் கடிதம் கொடுத்தால் நான் எனது அலுவலகத்திற்கு கொண்டு வந்து கொடுப்பேன். இவைகள் தான் என்னுடைய பணியாகும். சில சமயங்களில் நான் அமைச்சரின் இல்லத்திற்கும் சென்று செக்யூரிட்டியிடம் டிக்கட்டுகள் கொடுப்பேன். மேற்சொன்ன சரவணன் மற்றும் இப்ராகிம் எங்கள் போக்குவரத்து கழக ஊழியர்கள். அமைச்சர் அலுவலகத்தில் போக்குவரத்து கழக ஊழியர்கள் தவிற அவரது தனிப்பட்ட பணியாட்கள் இருந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக அமலாக்கத்துறை அழைப்பாணை அனுப்பி விசாரணைக்கு அழைத்தார்கள். நான் விசாரணைக்கு சென்ற தேதி ஞாபகமில்லை. விசாரணையின் போது உண்மையான வாக்குமூலம் தான் வழங்க வேண்டும் என்று எச்சரித்தார்கள். நான் என்னுடைய PAN card, Aadhaar Card, MTC indentity card ஆகியவற்றை கொடுத்தேன். விசாரணை அதிகாரி என்னிடம் கேள்விகள் கேட்டார்கள். அதற்கு நான் பதில்கள் கொடுத்தேன். தமிழில் ஒரு வாக்குமூலம் வைத்திருந்தார்கள் அதை வைத்து கொண்டு ஆங்கிலத்தில் டைப் செய்து கையெழுத்து வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில் நான் அனைத்து பக்கங்கலிலும் கையொப்பமிட்டேன். கடைசி பக்கத்தில் என் கையொப்பம் இட்டு எனது முகவரியை எழுதினேன். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.31. கடைசி பக்கத்தில் விசாரணை அதிகாரி சொல்ல சொல்ல நான் எழுதினேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

நான் விடுப்பில் இருந்தால் வேறு யாராவது அமைச்சருக்காக டிக்கெட் புக் செய்வார்கள். அ.சா.ஆ.31 ல் உள்ள வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது என்றாலும் அதில் என்ன உள்ளது என்பதை எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். தமிழில் என்னை விசாரித்து எழுதி கையொப்பம் வாங்கவில்லை. நான் அசைச்சரின் இல்லம் சென்று செக்யூரிடியிடம் டிக்கெட் கொடுப்பதற்கு 5 நிமிடம் ஆகுமா என்றால் டிக்கெட் கொடுத்து விட்டு உடனே வந்துவிடுவேன். டிக்கெட்டுகளை அசைச்சர் வீட்டில் கொடுத்து விட்டு வேறு எங்கும் செல்வதென்றால் எங்கள் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அனுமதியை நான் தொலைபேசி மூலம் பெறுவேன். நான் என் அலுவலக பணியை தவிற வேறு பணியை செய்ய சொன்னால் நான் என் உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுக்கலாம் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>:**

நான் SSLC வரை படித்துள்ளேன். அலுவலக கோப்புகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் இருக்கும் என்றால் சரியல்ல. தமிழில் மட்டும் தான் இருக்கும். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும்.

**<u>மறு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு ஆங்கிலம் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>**

**கேள்வி-** நீங்கள் அமலாக்கத்துறை உங்களிடம் வாக்குமூலம் வாங்கிய பிறகு எனக்கு ஆங்கிலம் தெரியாது என்னிடம் ஆங்கிலத்தில் வாக்குமூலம் தயார் செய்து கையொப்பம்

வாங்கிவிட்டார்கள் என்று உங்கள் உயர் அதிகாரிகளிடமோ அமலாக்கத்துறை உயர் அதிகாரிகளிடமோ புகார் எதுவும் தெரிவித்தீர்களா?

**பதில்--** இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |